# ஆசிய, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.40 லட்சம் ஊக்கத்தொகை: உதயநிதி வழங்கினார்

**சென்னை, அக்.30–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 3வது ஆசிய இளைஞர் விளையாட்டு தடகளப் போட்டி மற்றும் 4வது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 40.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கி, மேலும் பல பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார்.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து அக்டோபர் 24 முதல் 26 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டும் பேட்டி பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்க பதக்கம் வென்ற தடகள வீரர் ஆர். மானவ்வுக்கு 2 லட்சம் ரூபாய்க்கான காசோலை,

100 மீட்டர் தடை தாண்டும் பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கே.நந்தினிக்கு 2 லட்சம் ரூபாய்க்கான காசோலை, 4x400 மீட்டர் (கலப்பு) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 4x400 மீட்டர் (பெண்கள்) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 400 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கம் மற்றும் 400 மீட்டர் தடைதாண்டுதல் பிரிவில் வெண்கல பதக்கம் என 4 பதக்கங்கள் வென்ற ஒலிம்பா ஸ்டெஃபிக்கு 6,50,000 ரூபாய்க்கான காசோலை,

4x400 மீ (ஆண்கள்) ரிலே பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற தடகள வீரர் எம்.ஷரனுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, டிரிபிள் ஜம்ப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் வி. தினேஷ்க்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, உயரம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரர் ஆதர்ஷ் ராமுக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை, நீளம் தாண்டுல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை பவானியாதவ் பகவ்வுக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை என தடகள போட்டிகளில் பதக்கங்களை வென்ற 7 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 15.50 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் மெட்லிரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற எட்வினாஜேசனுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.20 லட்சம் மற்றும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.5 லட்சம் என மொத்தம் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை துணை முதலமைச்சர் வழங்கினார்.

பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர் வீரங்கனைகளுக்கு மொத்தம் தொகை 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை துணை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தடகள சங்க செயலாளர் சி.லதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**தேவர் குருபூஜையையொட்டி நந்தனத்தில் உள்ள அவரது சிலைக்கு த.மா.கா சார்பில் துணை தலைவர் முனவர் பாஷா, பொதுச்செயலாளர்கள் ஜி. ஆர் வெங்கடேஷ், எம்.பி நாதன்,பி ஜவஹர் பாபு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிர்வாகிகள் லூயிஸ், கோவிந்தசாமி, பாடி சுந்தரம், லோகநாதன், டைல்ஸ் முருகன், விவேக், வேதா மற்றும் பலர் உடன் உள்ளனர்.**




# உலகின் கடல்சார் மையமாக இந்தியாவை மாற்றுவதில் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கிறது: அமைச்சர் எ.வ.வேலு பேச்சு

**சென்னை, அக்.30**

**உலகின் கடல்சார் மையமாக இந்தியாவை மாற்றுவதில் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கிறது என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.**

இந்திய கடல்சார் வார மாநாடு மும்பையில் 27ந்தேதி தொடங்கியது. துறைமுகங்களை கொண்ட ஒவ்வொரு மாநிலமும் இந்த மாநாட்டில் தனித்தனி அமர்வுகளை அமைத்து தங்களின் மாநிலத்திற்கு தொழில் தொடங்க வரும்படி முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன. அந்த வரிசையில் தமிழ்நாடு அரசின் அமர்வு நேற்று நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்களின் தலைவர் சுனில் பாலிவால், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணை தலைவர் வெங்கடேஷ் மற்றும் தமிழக அரசுத்துறையின் மூத்த அதிகாரிகள், துறைமுகங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

1,069 கி.மீ. நீளமான கடற்கரை கொண்ட இந்தியாவின் 2வது நீளமான கடற்கரை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 3 முக்கிய பெருந்துறைமுகங்களான சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் துறைமுகங்கள் மற்றும் 17 சிறு துறைமுகங்கள், பல தொழிற்பூங்காக்கள் ஆகியவை தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

சரக்கு ஏற்றுமதி, மீன்பிடி, கப்பல் கட்டுதல், மறுசுழற்சி, கடல்சார் சுற்றுலா போன்ற துறைகளில் தமிழ்நாடு முக்கிய மையமாக மாறியுள்ளது. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்குடன் பயணித்து வரும் தமிழ்நாடு அரசு, தனது கடல்சார் வர்த்தகம் மற்றும் தொழில்துறையை மேம்படுத்துவதை முக்கிய இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறது.

கடலூர் துறைமுகத்தை தனியார் முதலீட்டுடன் 40 ஆண்டுகளுக்கு பிறகு இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ராமேசுவரம் தீவுப்பகுதியில் கடல் மார்க்க படகுப்போக்குவரத்து தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ராமேசுவரம் – தலைமன்னார் இடையே குறைந்த தூர பன்னாட்டு கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்காக மத்திய அரசிடம் முறையிட்டுள்ளோம். கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம், சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு லட்சக்கணக்கான பயணிகள் வந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாள 8 கி.மீ. நீளம் கொண்ட அணுகு தோணித்துறை உடன்குடியில் அமைக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. கடலூரில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தரங்கம்பாடி நாகை வேளாங்கண்ணி இடையே பயணிகள் படகு போக்குவரத்து தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவில் முதலீட்டுக்கு மிகுந்த உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருகிறது. இந்தியாவை உலகின் கடல்சார் மையமாக மாற்றும் பயணத்தில் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கிறது. தமிழ்நாட்டின் கடல்சார் வளர்ச்சி, இந்தியாவின் கடல்சார் பொருளாதாரத்தை புதிய உயரத்திற்கு கொண்டு செல்லும்.

உகந்த சூழ்நிலையை பயன்படுத்தி, உள்நாட்டு கப்பல் கட்டுதலை ஊக்குவிக்க, தூத்துக்குடி மற்றும் கடலூர் துறைமுகங்களை பயன்படுத்தும் வகையில் முக்கிய முயற்சிகளைதமிழ்நாடு மேற்கொண்டு வருகிறது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டு செயல்பட தொடங்கிவிட்டது. நீலப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அனைத்து முதலீட்டாளர்களையும் தமிழகம் வரவேற்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

## முத்துராமலிங்கத் தேவருக்கு விஜய் புகழாரம்

சென்னை, அக். 30–

தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பனையூரில் உள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் முத்துராமலிங்கத் தேவரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில் விஜய் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர், ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகத் தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர், அய்யா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். சமூக ஒற்றுமை, மத நல்லிணக்கத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த அய்யா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் மற்றும் குரு பூஜை தினத்தில், எமது அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.


### பெயர் மாற்றம்

நான் Given name: ஸ்ரீராஜ் (Sriraj), Surname: போஸ்கோ உதய குமார் (Bosco udhaya kumar), தந்தை பெயர் போஸ்கோ உதய குமார் (Bosco Udhaya Kumar), பிறந்த தேதி 08.05.1979, பிளாட் எண். 3, கதவு எண். 3A, 2வது தளம், பெஸ்ட் நெஸ்ட் ஹோம்ஸ், கோவிந்தசாமி தெரு, நங்கநல்லூர், பழவந்தாங்கல், சென்னை-600 114, என்ற விலாசத்தில் வசிக்கும் நான் இனி Given name: ஸ்ரீராஜ் **(SRIRAJ),** Surname: போஸ்கோ **(BOSCO)** என்று அழைக்கப்படுகிறேன்.

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள். தென் சென்னை கோட்டம். கிண்டி, சென்னை கோட்டம். ந.க.எண்.ஆ1/5581/2025 பிறப்பு சான்று**

S.நந்தகுமார், ஃபிளாட் B2, சிருங்கார், 6/31, டாக்டர். சதாசிவம் தெரு, தியாகராய நகர், சென்னை–600 017. — மனுதாரர்

எதிராக

வருவாய் கோட்ட அலுவலர், கோட்டாட்சியர் அலுவலகம், கிண்டி. — எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரின் சகோதரி **சுஜாதா.T,** என்பவர் கடந்த 02.11.1976 தேதியன்று 13/7, சின்னய்யா தெரு, தியாகராய நகர், சென்னை–600 017. என்ற விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த பிறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் கிண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலர்,
கிண்டி.

## விவ்ரிடி கேபிடல் லிமிடெட்

(CIN - U65929TN2017PLC117196)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிட்டன், எண். 200/1-8, 2வது தளம், பிளாக் -1, அண்ணா சாலை, சென்னை - 600002.

**30 செப்டம்பர், 2025 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**

[ செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015-ன் விதி 52 (8) மற்றும் 52 (4) ]

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | செப்டம்பர் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டு | செப்டம்பர் 30, 2024ல் முடிவடைந்த காலாண்டு | மார்ச் 31, 2025ல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | | ( தணிக்கை செய்யப்படாதது ) | ( தணிக்கை செய்யப்படாதது ) | ( தணிக்கை செய்யப்பட்டது ) |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 41,044.89 | 32,325.88 | 1,34,711.18 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / ( நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன் ) | 7,203.89 | 7,515.92 | 29,063.38 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 7,203.89 | 7,515.92 | 29,063.38 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 5,364.19 | 5,622.32 | 22,004.08 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) ( வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது | 4,705.52 | 5,617.85 | 22,597.22 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,820.09 | 1,781.69 | 1,804.08 |
| 7 | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 81,818.86 | 59,622.43 | 71,863.51 |
| 8 | பங்கு பிரீமியம் கணக்கு | 1,32,162.58 | 1,31,618.73 | 1,31,929.82 |
| 9 | நிகர மதிப்பு | 2,24,895.56 | 2,02,116.87 | 2,14,691.43 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 8,68,568.12 | 6,76,736.43 | 8,01,114.58 |
| 11 | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - |
| 12 | கடன் பங்கு விகிதம் | 3.83 | 3.19 | 3.48 |
| 13 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது |
| | 1. அடிப்படை | 5.58 | 5.87 | 22.91 |
| | 2. டைலூட்டட் | 5.48 | 5.79 | 22.50 |
| 14 | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 15 | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 16 | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |
| 17 | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |

**குறிப்பு :**

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015-ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்ஸ்சேஞ் போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52(8) மற்றும் 52(4)-ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2025-ம் காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் ( URL.www.bseindia.com ) மற்றும் கம்பெனியின் இணையதளமான ( www.vivriticapital.com /investors.html ) - ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52 (4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ் (பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து ( www.bseindia.com ) ல் அணுகலாம்.

**விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/-
**வினீத் சுகுமார்**
நிர்வாக இயக்குனர்
DIN 06848801

இடம் : சென்னை
தேதி : 28-10-2025

## ஸ்ரீமாருதி மரைன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

(தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழக லிமிடெட்டுடன் கூட்டு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண்.1/220, காமராஜ் தெரு, கேளம்பாக்கம், காஞ்சீபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603 103. Fax: 044-27474320

Email:sreemaruthimarine@rediffmail.com | Website: http://www.sreemaruthimarine.com | CIN: L24290TN1973PLC006441

**30 செப்டம்பர் 2025-ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | 30 செப். 2025ல் முடிந்த காலாண்டு | 30 செப். 2025ல் முடிந்த அரையாண்டு | 30 செப். 2024ல் முடிந்த காலாண்டு | 31 மார்ச் 2025ல் முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | (தணிக்கை யாகாதது) | (தணிக்கை யாகாதது) | (தணிக்கை யாகாதது) | (தணிக்கை யானது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 31.32 | 31.32 | 75.53 | 124.18 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு முன்#) | (4.09) | 0.34 | (4.39) | 6.99 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு பின்#) | (4.09) | 3.07 | (4.39) | 6.99 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு பின்#) | (4.09) | 3.07 | (4.28) | 3.03 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | (4.09) | 3.07 | (4.28) | 2.96 |
| 6 | சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/-) | 78.03 | 78.03 | 78.03 | 78.03 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை அறிக்கையில் உள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) (குறிப்பு Dஐ பார்க்க) | - | - | - | - |
| 8 | ஒரு சமபங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | 1. ஆரம்பம் | (0.52) | 0.39 | (0.55) | 0.38 |
| | 2. பலமிழந்தது | (0.52) | 0.39 | (0.55) | 0.38 |

**குறிப்புகள்:**

A. மேற்குறிப்பிட்டுள்ளவை செபி (பட்டியல் கடமைகள் மற்றும் பிற வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ் இணையதளத்தின் https://www.msei.in/Corporates/Corporate-Securities-Information/Corporate-Update/default.aspx?type=2-ல் கிடைக்கும்.

B. கணக்கியல் கொள்கைகளில் மாற்றம்(கள்) காரணமாக நிகர லாபம்/நஷ்டம், மொத்த விரிவான வருமானம் அல்லது பிற தொடர்புடைய நிதிப் பொருள்(கள்) மீதான தாக்கம் "இல்லை"

C. #இன்ட் ஏஎஸ் விதிகள்/விதிகளில் எது பொருந்துமோ அதன்படி விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண பொருட்கள் லாபம் மற்றும் நஷ்ட அறிக்கையில் சரி செய்யப்பட்டுள்ளது.

குழுவின் ஆணைப்படி
K. குருமூர்த்தி
முழு நேர இயக்குனர்

தேதி : 29.10.2025
இடம் : சென்னை

**BEFORE THE PRINCIPAL SESSIONS JUDGE**
**City Civil Court at Chennai**
**Original Petition No. 103 of 2025**

In the matter of Hindu Minority and Guardianship Act and in the matter of Minor S.Subarna (Female) born on 29.08.2010 (Rep my mother S.Kavitha)

S. Kavitha (F/45)
W/o Late S.Suresh Kumar,
Guardian/Mother of Minor S.Subarna,
No. 3/40, 1" Street, 3d Block, Kavingar Kannadasan Nagar,
Kodungayur, Chennai -600118.

**PUBLIC NOTICE**

இதனால் அறிவிப்பது என்னவென்றால் சென்னை, கொடுங்கையூர் கவிஞர் கண்ணதாசன் நகர், 3வது பிளாக், முதல் தெரு, எண். 3/40 என்ற விலாசத்தில் வசிக்கும் S.கவிதா W/o லேட் S.சுரேஷ்குமார் அவர்களின் மகளான சுமார் 15 வயதுடைய மைனர் S.சுபர்ணா மைனராக இருப்பதால் கீழே கொடுக்கப்பட்ட சொத்து விபரத்தில் உள்ள சொத்தினை மேற்சொன்ன மைனர் பங்கு உட்பட விற்பனை செய்யவும் அது சம்பந்தமான அனைத்து ஆவணங்களில் கையோப்பமிட்டு விக்கிரையம் நிறைவேற்ற முடிவு செய்து அதற்காக அனுமதி கோரி OP.No.103 of 2025 மனுதாக்கல் செய்து கடந்த 25.10.2025 அன்று டாம் டாம் மற்றும் கோர்ட் நோட்டீஸ் போர்டு அனுமதிக்கப்பட்டு மற்றும் பத்திரிக்கையில் பொது அறிவிப்பு உத்தரவு பெற்றார்.

கீழ் கண்ட சொத்து விபர சொத்தை முழுவதும் மைனர் S. சுபர்ணா உட்பட S.முகம்மது சாகிர் மற்றும் முகம்மது கலீல் இருவருக்கும் விற்பனை செய்ய S.கவிதா அனுமதி கோரிய மனுவை சென்னை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை தெரிவிக்க நினைத்தால் அவர்கள் சென்னையில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வரும் 28.11.2025 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தெரிவிக்கலாம் என்று இதன் மூலம் அறிவிக்கிறேன்.

**சொத்துவிபரம்**

All that piece and parcel of house site situated at Door No. 3/40, 1st Street, 3rd Block, A- Type, Plot No. 40, TNHB, Kodungayur Phase-I, (MUDP-I) Kaviyarasu Kannadasan Nagar, Chennai 600 118, situated in S. No. 85 part measuring 429 sq.ft. Kodungayur Village, Chennai district, Perambur Taluk, situated within the sub-registrar district of Madavaram and registrar District of North Madras and entire property bounded on,
North by 16 feet road
South by Plot No. 3/80
East by - Plot No.3/41
West by - Plot No. 3/39
Measuring,
East to west on the Northern side 13 feet
East to west on the Southern side 13 feet
North to South on the Eastern side 33 feet
North to South on the Western side 33 feet
Altogether measuring extent of 429 sq. ft.

B. MANIMARAN
ADVOCATE
Counsel for Petitioner

**Next Hearing: 28.11.2025**

## இந்தோ நேஷனல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: லட்சுமி பவன், 609, மவுண்ட் ரோடு, சென்னை–600 006. | CIN NO : L31909TN1972PLC006196

**30 செப்டம்பர் 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனியான / ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ.லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிந்த 3 மாதங்கள் | | | முடிந்த அரையாண்டு | | முடிந்த ஆண்டு | முடிந்த 3 மாதங்கள் | | | முடிந்த அரையாண்டு | | முடிந்த ஆண்டு |
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| | 30/09/2025 | 30/06/2025 | 30/09/2024 | 30/09/2025 | 30/09/2024 | 31/03/2025 | 30/09/2025 | 30/06/2025 | 30/09/2024 | 30/09/2025 | 30/09/2024 | 31/03/2025 |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 12062.50 | 12164.43 | 13092.98 | 24226.93 | 24365.26 | 46662.50 | 12115.48 | 12164.43 | 13092.99 | 24279.91 | 43372.88 | 65743.86 |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) | 308.91 | 174.36 | 170.98 | 483.27 | 280.23 | 106.39 | 150.13 | 118.80 | 187.55 | 268.93 | 16,631.92 | 15,129.08 |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 267.91 | 162.36 | 199.98 | 430.27 | 301.23 | 101.39 | 109.13 | 106.80 | 216.55 | 215.93 | 13,393.45 | 12,194.61 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 262.06 | 140.61 | 192.98 | 402.67 | 285.23 | 147.89 | 132.64 | 80.73 | 209.55 | 213.37 | 13,557.94 | 12,421.60 |
| சமபங்கு மூலதனம் | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 |
| இதர ஈக்விடி | | | | | | 22234.20 | | | | | | 43441.79 |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்/பின்) (ஒன்று ரூ. 5/–) | | | | | | | | | | | | |
| 1. அடிப்படை | 3.57 | 2.16 | 2.67 | 5.74 | 4.02 | 1.35 | 1.85 | 1.37 | 2.89 | 3.21 | 181.00 | 165.02 |
| 2. டைலூட்டட் | 3.57 | 2.16 | 2.67 | 5.74 | 4.02 | 1.35 | 1.85 | 1.37 | 2.89 | 3.21 | 181.00 | 165.02 |

குறிப்பு: SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் எங்கள் கம்பெனியின் இணையதளம் www.nippo.inல் உள்ளது.

**இடம்: சென்னை–600 006**
**தேதி: அக்டோபர் 29, 2025**

**இந்தோ நேஷனல் லிமிடெட்டுக்காக**
**இணை நிர்வாக இயக்குனர்**

**ISO 9001 and ISO 14001 Certified Company**